ஞாலகுருவின் படைப்புக்கள்

# இந்துமதம் என்பது நமது தமிழ்மொழி மதம்தான்



இந்த மண்ணுலகிலேயே முதல்
இனம் என்ற பெருமைக்குரிய தமிழினம்தான்
இந்த உலகிலேயே பெரிய அளவில்
தன்மானத்தையும், இனமானத்தையும்,
இன உரிமையையும், மொழி உரிமையையும் ...
மறந்து துறந்து அன்னியர்களிடம்
அடிமையாகிக் கொண்டேயிருக்கிறது.
தமிழர்களில் பேராசைக்காரர்களும்,
சுயநலக்காரர்களும் பெருமளவில்
தலைவர்களாக மாறி தமிழர்களை
அன்னியர்களுக்கு அடகு வைத்தும்,
விலைக்கு விற்றும் சுகவாழ்வு
வாழ்ந்து கொண்டு இருக்கின்றார்கள்.


அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானம்,
12வது பதினெண்சித்தர் பீடாதிபதி, மடாதிபதி, ஞானாச்சாரியார்,
**ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூறார்.**
(சென்னை செங்குன்றத்தை அடுத்த காரணோடையில் கோயில் கொண்டருளுபவர்)



மெய்யான இந்துமத ஆண்டு 43,73,123 ஐப்பசி மாதம்.

**இந்து இலக்கியக் கழக வெளியீடு**

# உள்ளுறை

1. **"இந்துமதம் என்பது நமது தமிழ்மொழி மதம்தான்"** - விரகாலூர் வட்டார அடியான்களுக்கு குருதேவர் அவர்கள் 1-4-1989இல் எழுதிய செயல்விளக்க ஊக்க ஆக்கத் திருவோலை.

2. **"இந்துமதம் வேறு; ஹிந்துமதம் வேறு!"** - துறையூரைச் சேர்ந்த ஆர்வலர் ஒருவருக்கு 29-5-1989இல் குருதேவர் அவர்கள் எழுதிய கருத்து விளக்க மடல்.

3. **"நமது இந்துமதத்தின் சிறப்பு"** - 1993இல் குருதேவர் எழுதிய அஞ்சலின் ஒரு பத்தி.

# இந்துமதம் என்பது நமது தமிழ்மொழி மதம்தான்

தலைமைப்பீடம்,
1-4-1989.

அருள்மிகு உத்தண்டமாகாளி சன்னிதானம் சித்தரடியான் திரு Dr S. அமிர்தராசு (1, இரயில்வே நிலைய சாலை, புள்ளம்பாடி P.O., திருச்சி - 621711); அருள்மிகு சமயபுரம் மாரியம்மன் சன்னிதானம் சித்தரடியாள் K.சமுத்திரவள்ளி அருட்சமூகத்திற்கு,

ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் குருவாணைப்படி தலைமைப்பீடம் வரையும் **செயல்விளக்க ஆக்க ஊக்கத் திருவோலை**.

1) அனைத்தும் குருவின் செயலே! தாத்தாக்கள் ஆத்தாக்கள், அம்மையப்பன்கள் திருவருளே!

2) தங்களின் அஞ்சல்கள் அனைத்தும் கிடைக்கின்றன. குருதேவரிடம் உடனுக்குடன் படித்தும், காண்பிக்கப்பட்டும் பதில் அனுப்பப் படுகிறது. கவலை வேண்டாம்.

3) குருதேவர் அவர்களுக்கு ஓய்வு நேரமில்லாததைப் பொருட்படுத்தாமலும்; தனது உடல்நிலையையும் பாராது பல முக்கிய அலுவல்களுக்கிடையில் இவ்வஞ்சலை வரைகின்றார். இதன் முக்கியத்துவம் அறிந்து செயல்படுங்கள். மேலும், இவ்வஞ்சலை தங்கள் வட்டாரத்தார் அனைவருக்கும் படித்துக் காட்டுங்கள்.

4) இத்துடன் தங்களுக்கு அனுப்பியுள்ள தமிழின மொழி மத விடுதலை இயக்கத்தின் கொள்கை விளக்கப் புத்தகத்தை நன்கு படித்துத் தெளிவு பெறுங்கள். இதுபோல, பல கொள்கைப்

புத்தகங்களையும், குருதேவர் அறிக்கைகளையும், வெளியீடுகளையும் தாங்கள் வாங்கிப் படித்து கொள்கைத் தெளிவு பெறுங்கள். பலரையும் வாங்கிப் படிக்கக் கூறி கொள்கைத் தெளிவு பெற உதவிடுங்கள். கருத்து விளக்கம் பெறுங்கள்.

5) குருதேவர் எண்ணற்ற தனிமனிதர்களுக்கு அருளை, அருளாளர் நிலையை அவரவர்களின் தகுதிகளையோ, பாரம்பரியத்தையோ ஆராயாமலேயே வாரிவாரி வழங்குகிறார். ஆனால், அவர்களில் பெரும்பாலானவர்கள் தானென்ற அகம்பாவத்தாலும், ஆணவத்தாலும், பதவிச் சண்டைகளாலும், புகழாசையாலும், பொருளாசைகளாலும் குருதேவரை விட்டு விலகியே தான்தோன்றித்தனமாகச் செயல்பட ஆரம்பித்து விட்டார்கள். இன்னும் சொல்லப் போனால், தங்கள் தங்கள் வளர்ச்சியை மட்டும் பார்க்கிறார்களே ஒழிய இயக்கத்தின் வளர்ச்சியை; தத்துவத்தின் மறுமலர்ச்சியை; தமிழினத்தின் உரிமை மீட்சியை; தமிழ்மொழியின் செழிச்சியை; இந்துமதத்தின் ஆட்சி மீட்சியை; ஏழை எளிய பாட்டாளிப் பாமர மக்களின் துன்பத்தை ... எண்ணிப் பார்த்துச் செயல்படவே இல்லை!

அதாவது ஒரே தலைமையின் கீழ் கட்டுப்பட்டு மதிப்போடும், பணிவோடும், உண்மையோடும் செயல்பட வேண்டும் என்ற உணர்வோ, கருத்தோ, போக்கோ ஏறத்தாழ நம்மவர்களில் நூற்றுக்கு தொண்ணூற்றொன்பது பேர்களிடம் இல்லை. எனவேதான், நமது இயக்கம் ஒரு புரட்சி இயக்கமாக, ஒரு விடுதலை இயக்கமாக, ஒரு மறுமலர்ச்சி இயக்கமாக வளரவே முடியவில்லை. இதுதான் உண்மை.

6) இன்றைய நடைமுறைக்கு இந்துமதத்தின் செயல்கள் அனைத்துக்கும் உரிய காரணகாரியங்களையும், முறையான விளக்கங்களையும், வரலாற்றுப்பூர்வமான செய்திகளையும், இலக்கிய ஆதாரங்களையும் வழங்குபவர்தான் நமது குருதேவர். நமது குருதேவர் புதிய மதத் தத்துவத்தையோ, மதத்தையோ உருவாக்க முற்படவில்லை.

மக்கள் மறந்து போனவைகளையும், எதிரிகள் மறைத்து குறைத்து சிதைத்து அழித்தவைகளையும் வெளிப்படுத்தி செப்பனிட்டு மீண்டும் நிலைநிறுத்துவதற்குத்தான் முயற்சி செய்கிறார்.

இதை மதவாதிகளோ அல்லது பகுத்தறிவு வாதிகளோ அல்லது இலக்கிய வாதிகளோ அல்லது வரலாற்று வல்லுனர்களோ அல்லது அரசியல் வாதிகளோ அல்லது சமுதாய சீர்திருத்தவாதிகளோ புரிந்து கொள்ளவே மாட்டேன் என்கிறார்கள். புரிந்து கொண்டவர்களும் கூட கண்மூடித்தனமாகத் தங்களுடைய பழைய தலைவர்களின் பின்னால்தான் போய்க் கொண்டிருக்கிறார்களே தவிர, குருதேவரோடு இணைந்து செயல்பட முன்வர மறுக்கிறார்கள்.

தமிழ்நாட்டில் தோன்றிய, தோன்றியிருக்கின்ற தலைவர்களில் யாருமே செய்ய முடியாத, செய்யத் தெரியாத செயல்களைத்தான் குருதேவர் செய்கிறார்; இவருடைய சாதனைகளும் போதனைகளும்தான் தமிழினத்தையும், தமிழ்மொழியையும், தமிழ் மதத்தையும் முறையாகவும், முழுமையாகவும் காப்பாற்ற முடியும்; அப்படி தமிழர்கள் காப்பாற்றப் பட்டால்தான் உலக அளவில் எல்லா இனங்களும் விடுதலை வாழ்வோடு, மனிதத் தன்மையையும், மனிதப் பண்பாட்டையும் காத்து வளர்த்துக் கொள்ள முடியும். இல்லாவிட்டால் உலகம் அநாகரிகத்தையும், அழிவையும் நோக்கித்தான் செல்ல நேரிடும்.

இவ்வளவு பெரிய திட்டத்தை நமது குருதேவர் அமைதியோடும், அடக்கத்தோடும், நிதானத்தோடும் செய்து வருகிறார். ஏனென்றால் 'இந்த மண்ணுலகிலேயே முதல் இனம்', 'அருளுலகில் வாரிசான இனம்', 'அனைத்துக்கும் தலைமையாக, வழிகாட்டியாக, வழித்துணையாக இருக்கக் கூடிய தகுதி படைத்த இனம்' என்ற பெருமைக்குரிய <u>தமிழினம்தான் இந்த உலகிலேயே பெரிய அளவில் தன்மானத்தையும், இனமானத்தையும், தன்னுரிமையையும், இன உரிமையையும், மொழி உரிமையையும், மத உரிமையையும், வரலாற்றுப் பெருமையையும், ...</u>

<u>மறந்து துறந்து வெறுத்து மறுத்து எதிர்த்து இழித்து பழித்து அன்னியர்களிடம் அடிமையாகிக் கொண்டேயிருக்கிறது</u>. அதாவது, தமிழர்களில் கூலிகளும், கங்காணிகளும், போலிகளும், பேராசைக் காரர்களும், சுயநலக் காரர்களும் பெருமளவில் தலைவர்களாக மாறி தமிழர்களை அன்னியர்களுக்கு அடகு வைத்தும், விலைக்கு விற்றும், சுகவாழ்வு வாழ்ந்து கொண்டு இருக்கின்றனர்கள். எனவேதான், தமிழ்நாட்டில் சாதிச் சண்டைகள், மதச் சண்டைகள், வட்டாரச் சண்டைகள், ஏழை பணக்காரர்களின் சண்டைகள், தொழிலாளி முதலாளிகளின் போராட்டங்கள் என்று காலம் முழுவதும் நிகழ்ந்து கொண்டேயிருக்கின்றன.

இவற்றால் தமிழர்கள் ஒன்றுதிரள முடியவில்லை. தங்களுடைய மானத்தையோ, இனத்தையோ, மொழியையோ, மதத்தையோ, வரலாற்றையோ, உரிமையையோ, பெருமையையோ, இழப்புக்களையோ, ... பெரிய அளவில் ஒன்று கூடி சிந்திக்கவோ, விவாதிக்கவோ முடியாமல் இருக்கின்றனர்கள். அதாவது, தமிழர்களுக்குள் என்றைக்குமே ஒற்றுமை ஏற்பட்டு விடாதபடி பல சக்திகள் (எதிரிகள்) நன்கு திட்டமிட்டு பல ஏற்பாடுகளைச் செய்து விட்டார்கள். அதன்படி தமிழர்களுக்குள்ளேயே அரசியல் கட்சிகளின் பெயராலும், திரைப்பட நடிகை நடிகர்களின் பெயராலும், சாதியின் பெயராலும், மதத்தின் பெயராலும், கீழ்த்தரமான உணர்வுகளின் பெயராலும் சண்டை சச்சரவுகள் வளர்ந்து கொண்டேயிருக்கின்றன, நிகழ்ந்து கொண்டேயிருக்கின்றன.

இவையெல்லாம் போதாமல் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்; ஆபாசமான படங்கள் கதைகள் வெளிவரும் நாளிதழ், வார ஏடு, மாத மலர் முதலியவைகள்; அறிவை மயக்கும் போதைப் பொருள்கள்; ... முதலியவை எந்த மாநிலத்திலும் இல்லாத அளவு நமது தமிழ் மாநிலத்தில் மட்டும்தான் இருக்கின்றன. இவற்றிற்கெல்லாம் ஊக்கமும், ஆக்கமும் அளிக்கும் வண்ணம் அல்லது இவைகளை வழிநடத்தும்

வண்ணம் எந்த மாநிலத்திலும் இல்லாத அளவு இந்த மாநிலத்தில்தான் எல்லாவகையான மாநிலத்தவர்களும், வெளிநாட்டார்களும் மிகப்பெரிய அளவில் செல்வாக்கு நிலையிலும், ஆட்சி நிலையிலும், அதிகார நிலையிலும் வாழ்கிறார்கள்.

இன்னும் சிறிது காலம் சென்றால் இந்த நாட்டை தமிழ்நாடு என்றே சொல்ல முடியாது. அந்த அளவிற்கு இந்நாடு அன்னியர்கள் பலரும் வாழக்கூடிய நாடாக மாறிவிடும். அவர்களிடம் தமிழர்கள் நன்றியும், உண்மையும், விசுவாசமும், பணிவும், அடக்கமும் உள்ள வேலைக்காரர்களாக, கூலிக்காரர்களாக, எடுபிடிகளாக, கங்காணிகளாக, எழுத்தர்களாக, தொண்டர்களாக அமைதியோடு வாழ்வார்கள், அமைதியோடு வாழ்வார்கள், அமைதியோடு வாழ்வார்கள், வாழ்ந்தே தீருவார்கள்.

அப்படி ஒரு மானங்கெட்ட வாழ்க்கை, உரிமையற்ற வாழ்க்கை, போலி வாழ்க்கை தமிழனுக்கு ஏற்பட்டேயாக வேண்டுமா?! தமிழ்மொழிக்கும், தமிழ்நாட்டுக் கடவுள்களுக்கும் அதேநிலைதானா?! என்ற கேள்வி எழுப்பி விடை காண முற்படுபவர்தான் நமது குருதேவர். அவருக்கு எத்தகைய விடை கிடைக்கப் போகிறது என்று தெரியவில்லை. அவருடைய வெற்றி அல்லது தோல்வி உலக மனித இனங்களுக்கும், உலக மொழிகளுக்கும், உலக மதங்களுக்கும், மனிதத் தன்மைக்கும், அருளுலகத்திற்குமே ஏற்படும் வெற்றியாகும் அல்லது தோல்வியாகும்.

ஏனென்றால், அவர் தனிமனிதனாக வாழவில்லை; அவரை அவரது தந்தை தனிமனிதராக வாழ வளர்க்கவுமில்லை; அவர் தன்னுடைய குடும்பத்தை தனிமனித வாழ்வாக நடத்தவும் இல்லை. அதாவது, அவர் ஆரம்பக் காலம் முதல் தம்மை ஓர் உலக வரலாறாகவே வளர்த்து வருகிறார். இன்னும் சொல்லப் போனால் இம் மண்ணுலகத்தின் வரலாறுகள் முழுவதையும்; அவருடைய வரலாறுதான் விளக்க

முடியும். இதைவிட இம்மண்ணுலகம் கடந்த 1359 அண்டபேரண்டங்களையும் விளக்கக் கூடிய முழுமையான வல்லமையும், வளமையும், வாய்ப்பும், வசதியும் நமது குருதேவர் ஒருவரிடம்தான் உண்டு.

அவர் அண்டபேரண்ட அருட்பேரரசராக, அருள்மிகு தாத்தா பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி, தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய குருமகாசன்னிதானம் சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரர் அவர்களால் முடிசூட்டப் பட்டவர். அதற்கு முன்னரே குருதேவர் 16 வயது முதல் 18 வயது வரை 2 ஆண்டுகள் தொடர்ந்து மதுரை தத்தனேரி சுடலையில் ஓமம், ஓகம், யாகம், யக்ஞம், தவம் என ஐந்தின் மூலமும் அரசயோகத்தைச் செய்து மாபெரும் வெற்றியைப் பெற்றவர். இதுபோல் அரசயோகத்தை செய்து முடித்தவர்கள் இம் மண்ணுலகில் யாரும் இல்லை. நமது குருதேவர்தான் முதல் மனிதர். அதாவது இந்த அரசயோகம் என்பது 12வது பதினெண்சித்தர் பீடாதிபதி வரை வெறும் ஏட்டுச் செய்தியாகத்தான் இருக்கும் என்ற குருபாரம்பரிய வாசகமே எதிர்காலத்தில் மெய்யாயிற்று.

இதேபோல் அண்டபேரண்ட அஜுதி ஆதிசத்திகள் சன்னிதானம் என்ற சித்திநிலையையும் ஏறத்தாழ 108 சித்திகளை அடைந்த பிறகே பெரும் முயற்சிகள் செய்து சித்தி செய்திட்டார் நமது குருதேவர். இந்த சித்தி நிலையையும் எவரும் அடைய முடியாது. இதுவரை அடையவும் இல்லை. தற்பெருமைக்காகவோ, மற்றவைகளுக்காகவோ நமது குருதேவர் செய்திகளை வெளியிடுவது இல்லை.

குரு பாரம்பரியம், அரச பாரம்பரியம், இலக்கிய பாரம்பரியம் என்ற மூன்று நூல்களும் பதினெண்சித்தர் பீடாதிபதிகளால் மட்டுமே எழுதப்படுபவை. அவைகளில்தான் சமய சமுதாய அரசியல் செய்திகள் உலக அளவில் இருக்கின்றன. இவற்றின் அடிப்படையில்தான் நமது குருதேவர் "தமிழன் ஒருவன்தான் உலகிலேயே 500

<u>கோடியாண்டுகள் பற்றிய முறையான வரலாற்றை **காலக்கணக்கீட்டு அடிப்படையில்** நிறைவாக எழுதி வந்திருக்கின்றான்</u>" என்று தெளிவாகக் கூறுகிறார்.

அதாவது உலகிலேயே எண்ணையும், எழுத்தையும் (Numbers and Alphabets) கண்டுபிடித்து கணக்கியலையும், மொழியியலையும் (Mathematics and Linguistics) முதன்முதல் தோற்றுவித்த பெருமை தமிழனுக்குத்தான் உண்டு. தமிழன் வைத்திருக்கக் கூடிய இந்துமதம் அனாதிகாலம் என்று பல நூறாயிரம் ஆண்டுகளுக்கு மிகத் தெளிவான வரலாற்றைப் பெற்றிருக்கிறது. அதன்பிறகே முறையாக மதத்தையும், மொழியையும், அறிவியல்களையும் வளர்ப்பதற்காக மொழியின் பெயராலேயே '**<u>தமிழ்ச் சங்கம்</u>**' என்ற ஒன்றை நிறுவிச் செயல்பட்டனர். அந்தக் காலம் இன்றோடு (1989இல்) 43,73,090 ஆண்டு என்ற காலக்கணக்கீடு நம்மிடம் இருக்கிறது.

இதில் கவனிக்க வேண்டியது என்னவென்றால்; தமிழ்மொழியில் தேர்ச்சி பெற்ற புலவர்கள்தான் கணக்கு, வானவியல், தாவரவியல், உயிரியல், பொருளியல், மருத்துவம், சிற்பம், ஓவியம், கட்டிடம், ... முதலிய ஞானம், விஞ்ஞானம், மெய்ஞ்ஞானம், அகஞானம், புறஞானம் எனப்படும் ஐந்து வகையான ஞானங்களையும் கற்றவர்களாகவும், கற்பிப்பவர்களாகவும் இருந்திருக்கின்றார்கள். அதனால்தான் அன்றைய தமிழர்கள் எந்தப் பதவியில் இருந்தாலும் சரி! எந்த தொழிலைச் செய்தாலும் சரி!, எத்தகைய அதிகார நிலையில் இருந்தாலும் சரி! ; தமிழ் அறிவில் வல்லவர்களாகவும், தமிழ் உணர்வில் மெய்யானவர்களாகவும், தமிழ்ப் பற்றில் வாய்மையானவர்களாகவும், தமிழ் உரிமைக்காக உயிரையும் கொடுத்து போராடுபவர்களாகவும், தமிழின் மானத்தையும் பெருமையையும் காக்கும் வண்ணம் உலகத்தையே ஓர் ஆட்சியின் கீழ் ஆள்பவர்களாகவும் வாழ்ந்திட்டார்கள்.

ஆனால், இன்றைய தமிழர்களில் ஏறத்தாழ பெரும்பாலான தமிழர்கள் பதவி ஆசை, பண ஆசை, புகழாசை, அதிகார வெறி, தன்னலம், கோழைத்தனம், அடிமைச் சிந்தை, கூலி மனப்பான்மை, ... முதலியவற்றால் தங்களுடைய தாய்மொழியான தமிழையே வெறுத்தும், எதிர்த்தும், மறுத்தும், இழித்தும், பழித்தும், சிதைத்தும், அடிமைப்படுத்தியும், வாடகைக்கு விட்டும், ... செயல்படக் கூடியவர்களாகி விட்டார்கள்! செயல்படக் கூடியவர்களாகி விட்டார்கள்! செயல்படக் கூடியவர்களாகி விட்டார்கள்!

இப் பேருண்மையைத்தான் பத்தாவது, பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதிகள் தங்களுடைய எழுத்துக்களில்;

1. தமிழின் வீழ்ச்சியே தமிழர்களின் வீழ்ச்சி!
2. தமிழின் தாழ்ச்சியே தமிழர்களின் தாழ்ச்சி!
3. தமிழின் சிதைவே தமிழர்களின் சிதைவு!
4. தமிழின் நலிவே தமிழர்களின் நலிவு!
5. தமிழின் புறக்கணிப்பே தமிழர்களின் புறக்கணிப்பு!
6. தமிழை மறப்பதே தமிழினத்தை மறப்பது!
7. தமிழைத் துறப்பதே தமிழர்களின் உரிமையை, பெருமையை துறப்பது!
8. தமிழின் ஆட்சியை மறப்பது தமிழர்களை அடிமைப்படுத்துவதே!
9. தமிழைப் பயன்படுத்தாதது அருளுலக சத்திகளை இழப்பதே!
10. தமிழ்ப் பற்றில்லாதது தன்னம்பிக்கை இல்லாததே!
11. தமிழ் உணர்வில்லாதது தன்மான உணர்வு இல்லாததே!
12. தமிழ் இல்லாத வாழ்க்கை அருளுலக குருட்டு வாழ்க்கையே!

என்பன போன்ற முழக்க வாசகங்களை வழங்கி இருக்கின்றார்கள். இப்படிப்பட்ட வாசகங்கள் நூற்றுக்கணக்கில் அவர்களால் வழங்கப்

பட்டிருக்கின்றன. அவற்றில் நினைவுக்கு வருபவைகளை மட்டுமே அவ்வப்போது நம்மவர்களுக்கு குருதேவர் வழங்குகிறார்.

7) நம் நாட்டில்தான் கடவுள் நேரடியாக அறுபத்து நான்கு முறை தோன்றி திருவிளையாடல் புரிந்து தமிழ் பேசி அருள் வழங்கியிருக்கிறார். அதுமட்டுமல்ல! நம் நாட்டில்தான் கடவுளர்களே தங்களுடைய தாய்மொழி தமிழ்தான் என்பதை மெய்ப்பித்து தமிழ்ச் சங்கங்களிலும், மக்களின் வாழ்விலும் தமிழ் பேசி பங்கேற்றிருக்கிறார்கள். இவற்றிற்கு எல்லாம் மேலாக நமது தமிழ்க் கடவுளின் அருளால் அறுபத்து மூன்று நாயன்மார்களும், பன்னிரண்டு ஆழ்வார்களும், கணக்கற்ற பத்தியாளர்களும், சத்தியாளர்களும், சித்தியாளர்களும், முத்தியாளர்களும், சித்து விளையாட்டுக் காரர்களும், ... காலங்கள் தோறும் நாட்டின் பல்வேறு பகுதிகளில் தோன்றித் தோன்றி தமிழ்மொழியில் அருளை ஊற்றெடுக்கச் செய்யும் அமுதச் செந்தமிழ்ப் பாடல்களைப் பாடியிருக்கிறார்கள்.

இப்படியெல்லாம் இருந்தும் கூட நமது தமிழர்கள் பிற மொழிகளில்தான் பூசைகளைச் செய்கிறார்கள், கல்வி கற்கிறார்கள், உரையாடல் கூட நிகழ்த்துகிறார்கள். ... இப்படிப்பட்ட இவர்களை எப்படித் திருத்துவது? எப்படித் திருத்துவது? எப்படித் திருத்துவது? என்றைக்கு இவர்கள் திருந்துவார்கள்?? என்றைக்கு இவர்கள் திருந்துவார்கள்?? என்றைக்கு இவர்கள் திருந்துவார்கள்?? ... இப்படிப்பட்ட வினாக்களுக்கு விடையாகத்தான் நமது குருதேவர் வாழ்ந்து வருகிறார்.

அதாவது, நமது குருதேவரின் ஒவ்வொரு நொடி வாழ்வும்; ஒவ்வொரு பேச்சும் மூச்சும்; ஒவ்வொரு சொல்லும் செயலும், ... மேற்படி வினாக்களுக்கு விடை கூறுவனவாகத்தான் இருக்கின்றன. ஆனால், இதுவரை கணிசமான அளவு பயன் ஏற்படவில்லை. தங்களைப் போல் அங்கொருவரும் இங்கொருவருமாகத்தான்

அவ்வப்போது தோன்றுகிறுர்கள். இப்படித் தோன்றுகின்றவர்களில் பெரும்பாலானவர்கள் குருதேவரால் தங்களின் சிக்கல் தீர்ந்தவுடனே? அல்லது ஓரளவு அருளுலகச் சத்தியோ, சித்தியோ கிடைத்தவுடனே? குருதேவரை விட்டு நெடுந்தொலைவு செல்கிறுர்கள். இந்த சோக வரலாறுதான் தொடர்ந்து வருகிறது.

இருந்தாலும், குருதேவர் தன்னம்பிக்கையோடும், இனப்பற்றோடும், மொழிப்பற்றோடும், மதப்பற்றோடும், பொதுநலப் பற்றோடும், உலக ஆன்மீக விடுதலை நம்பிக்கையோடும், தமிழின மொழி மத விடுதலையின் நம்பிக்கையோடும் தொடர்ந்து செயல்பட்டுத்தான் வருகின்றுர். அவருக்கு தக்க துணையாக அல்லது பக்கத் துணையாக இருப்பதற்கு மட்டுமாவது சிலர் கிடைத்தால் போதும் என்றுதான் குருதேவர் எதிர்பார்க்கிறுர்.

எனவே, **நீங்கள் பல்லாயிரக் கணக்கில் பணம் வசூலித்து ஆடம்பரமாக ஆரவாரத்தோடு குருதேவரை ஒரே ஒரு முறை வரவழைத்து விட்டு, பிறகு வரவழைக்காமல், பேசாமல் இருந்து விட வேண்டாம்**. வசூலாகும் பணத்தை குருதேவரை பலமுறை தங்கள் வட்டாரத்திற்கு வரவழைப்பதற்கு ஏதுவாக சேமித்து வைத்துக் கொள்ளுங்கள். மேலும், **உங்களுக்கு ஆதரவாகவும், அடிக்கடி உங்களுக்கு உடலுதவியோ, பொருளுதவியோ தரக் கூடியவர்களாகவும் சிலரையாவது உருவாக்கிக் கொள்ளுங்கள்**. அப்படிப்பட்டவர்களை மட்டும் குருதேவரிடம் நெருக்கமாக அறிமுகப்படுத்தி குருதேவரின் அருளையும், வாழ்த்தையும் அவர்களுக்கு பெற்றுத் தாருங்கள்.

அப்படியல்லாமல், சினிமா நடிகர்கள், அரசியல்வாதிகள் வரும்போது கூடுகின்ற கூட்டம்போல் குருதேவருக்கு ஒரு பெரிய பரபரப்பான கூட்டத்தை கூட்டிவிடாதீர்கள். அதனுல் பயன் ஒன்றும் ஏற்படாது. அதாவது குருதேவரை காட்சிப் பொருளாக்காதீர்கள். குருதேவரை குறிகாரராகவோ, மந்திரவாதியாகவோ அறிமுகப்படுத்தாதீர்கள். நமது குருதேவர் நெடிய பெரிய பாரம்பரியமான சித்தர் பாரம்பரியத்தில்

வந்தவர். பதினெண்சித்தர்களைச் சேர்ந்தவர். தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் அவர்களின் பேரன். பதினெண்சித்தர் பீடாதிபதி. மனிதர்களுக்கு தவம், குண்டலினி, ஞானக்காட்சி, ... முதலிய பல சித்திகளை வழங்க வல்லவர். அருளுலகத்தைப் பொறுத்தவரை எந்த சந்தேகங்களை கேட்டாலும் விளக்கம் தரக் கூடியவர். அதுவும் பகுத்தறிவு பூர்வமான விளக்கமாக இருக்கும். இந்துமதத்தின் தந்தை. இவர் ஒருவர்தான் இப்படி சொல்லிக் கொள்ள முடியும்.

இவர்தான் தமிழினத்துக்கு, தமிழ்மொழிக்கு, தமிழ் மதத்திற்குத் தலைவர்; தமிழர்களுக்குரிய குருபீடம், குருதேவர், ஞானாச்சாரியார், பதினெண்சித்தர் பீடாதிபதி, பதினெண்சித்தர் மடாதிபதி; இன்றைய உலகியலில் அருளை அநுபவப் பொருளாக வழங்க வல்லவர். இவர் ஒருவர்தான் தாம் உருவாக்கியுள்ள அடியான், அடியார், அடியாள், ... முதலியவர்களின் மூலம் பொதுமக்களுக்கு சத்திகளையும், சித்திகளையும் வழங்குகிறார்; நோய்களையும், பேய்களையும் நலப்படுத்துகிறார்; பிறப்பியல் (சாதகம்), வரியியல் (கைரேகை), நாள், கோள், மீன், கண்ணேறு, மந்திரவாதி, ... முதலிய பாதிப்புக்கள் அனைத்தையும் நலப்படுத்தித் தருகிறார். மேற்படி செயல்களுக்கு எல்லாம் உரிய மந்திரங்களை புத்தகமாகப் போட்டு வழங்கி இருக்கிறார்.

சாதிமத வேறுபாடில்லாமல் எல்லோரையும் ஏற்றுக் கொண்டு இருக்கிறார்; எல்லோருக்கும் அருள் வழங்குகிறார். மதம், இலக்கியம், அரசியல், ... முதலிய அனைத்துத் துறைகளிலும் தலைமை தாங்கி வழி நடத்தக் கூடிய தத்துவ நாயகமாக விளங்குகிறார். இவர்தான் **"யாராக இருந்தாலும் முயற்சித்தால் கடவுள் ஆகலாம்"** என்று கூறி வழி காட்டுகிறார். இவர்தான் அருளுலகிலும், பொருளுலகிலும் நம்புகிறவர்களுக்கு வழியாக, வழிகாட்டியாக, வழித்துணையாக, வழிப்பயனாக முழுமையாகச் செயல்படுகிறார். இவர்தான் எல்லா

மதக் கோயில்களையுமே மீண்டும் அருளூற்றுக்களாக மாற்றுகிறார், ... என்று இப்படி நமது குருதேவரை அறிமுகப்படுத்துங்கள். அப்பொழுதுதான் நமது குருதேவர் தனிமனித இல்லங்கள், பள்ளிகள், பிற நிறுவனங்கள் முதலியவற்றில் சென்று உரையாடவோ, சொற்பொழிவு ஆற்றவோ இயலும், இயலும், இயலும்.

அதாவது **நமது குருதேவர் காட்சிக்கு எளியவர், பழகுவதற்கும் இனியவர்** என்ற மாபெரும் உண்மையை நம்மைப் போன்றவர்கள்தான் மக்களிடையில் புரியவைக்க முடியும், புரியவைக்க முடியும், புரியவைக்க முடியும். அப்பொழுதுதான் நமது குருதேவர் அகன்று, பரந்து, விரிந்து கிடக்கும் மிகப்பெரிய கடல்பரப்பில் தனியொரு மனிதராக கட்டுமரம் ஏறி மீன்பிடிக்கச் சென்றவர் போல் நெடுங்காலமாக செயல்பட்டு வரும் நிலையில் ஒரு சில வெற்றிகளாவது கிடைக்கும், கிடைக்கும், கிடைக்கும். அதாவது நமது குருதேவர் காலத்தில் அவருடைய கொள்கைகளும், குறிக்கோள்களும், செயல்திட்டங்களும், நாற்றங்கால்களாகவும், பயிர்களாகவும் பயிராக்கப்பட்டேயாக வேண்டும். அதற்குரிய வண்ணம் நாம்தான் மிகப்பெரிய தியாகங்களை இரவு பகலாகச் செய்து செயல்பட்டேயாக வேண்டும்.

8) நமது குருதேவர் காலத்தில் மானுடர்களுக்கு மட்டும் அருள்வழங்கும் நிலை இருக்கக் கூடாது. ஊருக்கு ஒரு பொதுக் கேணி குடிதண்ணீர் கேணி வெட்டி வைப்பது போலவாவது ஊர்தோறும் உள்ள கோயில்களில் **ஊருக்கு ஒரு கோயிலாவது** குருதேவர் அருள் பெற்றவர்களால் அல்லது குருதேவரால் அருளேற்றப் பெற வேண்டும். அதாவது அருளூற்றாக மாற்றப் பட்டாக வேண்டும். அப்படி ஊறுகின்ற அருள்நீர்தான் மக்களின் தாகங்களையும், பசிகளையும் போக்கும்! போக்கும்! போக்கும்!

அதாவது கடவுளாக மதிக்கப்படுகின்ற கோயில் சிலைகளையே நாடி பிடித்துப் பார்த்து எந்த அளவு அருள் இருக்கிறது?; எந்த

அளவு அருள்நலப் பாதிப்பு ஏற்பட்டிருக்கின்றது?; அதற்காக என்னென்ன மருத்துவங்கள் செய்ய வேண்டும்? என்று கணித்து அந்த மருத்துவத்தைச் செய்யக் கூடிய அருளுலக மருத்துவன் நமது குருதேவர்.

இதனுடைய தத்துவம் என்னவென்றால் பதினெண்சித்தர்களும், பதினெட்டாம்படிக் கருப்புக்களும்தான் கல்லையும், புல்லையும், காணும் அனைத்து உயிரினங்களையும், பயிரினங்களையும், உயிரற்ற பிறவற்றையும் ... கடவுளாகவே மாற்றக் கூடிய ஆற்றல் பெற்றவர்கள். இப்படி இவர்கள் உருவாக்குகின்ற கடவுள்கள் எல்லாம் சிறப்புடன் முழுமையாக செயல்படும் வண்ணம் உதவுவதற்காகத்தான் அவ்வப்போது பதினெண்சித்தர் பீடாதிபதிகள் தோன்றுவார்கள். இதன்படி இம்மண்ணுலக முடிவுக்குள் நாற்பத்தெட்டு பதினெண்சித்தர் பீடாதிபதிகள் தோன்றுவார்கள். இந்த நாற்பத்தெட்டு பேர்களில் பன்னிரண்டாவது பீடாதிபதியாகத் தோன்றி இருப்பவர்தான் நமது குருதேவர்.

இதை ஏன் இங்கு குறிப்பிடுகின்றேன் என்றால் இப்படிப்பட்ட நமது குருதேவராலேயே நமது தமிழர்களை ஒன்று திரட்ட முடியவில்லை. தன்மான உணர்வு, தன்னம்பிக்கை உணர்வு, இனப்பற்று, மொழிப்பற்று, மதப்பற்று முதலிய உணர்வுகள், ... முதலியவற்றை பெறச் செய்ய முடியவில்லை. ஏனென்றால், பகுத்தறிவு வாதிகளும், நாத்திகர்களும் நமது குருதேவரை ஒரு பூசாறி, ஒரு குறிகாரரர், ஒரு மந்திரவாதி, ஒரு மதத் தலைவர், ஒரு மதவாதி, ... என்று எண்ணுகிறார்கள்.

ஆனால் மதவாதிகளோ குருதேவரை ஓர் அரசியல்வாதி, ஒரு புரட்சிக்காரரர், ஒரு மதச் சீர்திருத்தவாதி, ஒரு சமுதாயச் சீர்திருத்தவாதி, ஒரு மொழி வெறியன், ஓர் இன வெறியன், ... என்றே எண்ணுகிறார்கள். அரசியல்வாதிகளோ புதியதாக வளர முற்படும் ஒரு புதிய அரசியல் கட்சித் தலைவர், மதத்தலைவர், பயங்கரவாதி, ... என்று எண்ணுகிறார்கள். இப்படிப்பட்ட காரண காரியங்களால்தான்

நமது குருதேவரால் நமது தாயகத்து மக்களை தட்டியெழுப்பி மொழி விடுதலைக்காகவும், இன விடுதலைக்காகவும், மத விடுதலைக்காகவும் பக்குவப்படுத்த முடியவில்லை! முடியவில்லை! முடியவில்லை!

மேலும், நமது அரசியல்வாதிகள் மிகமிகக் கேவலமான முறையில் அற்ப ஆசைகளுக்காக நமது மக்களின் மொழியுணர்வையும், இனஉணர்வையும் அவ்வப்போது தூண்டிவிட்டு தூண்டிவிட்டு **சுய லாபம் தேடி விட்டார்கள். அதாவது அரசியல் தலைவர்கள்; அரசியல் வெற்றிக்காக அல்லது தங்களுடைய கட்சியின் வெற்றிக்காக நம் தாயக மக்களின் மொழி உணர்ச்சியையும், இன உணர்ச்சியையும் வீணாக்கி விட்டார்கள்; விலைக்கு விற்று விட்டார்கள். எனவே, இனிமேல் நமது தாயகத்து மக்களை மொழியுணர்ச்சியின் மூலமோ, அல்லது இன உணர்ச்சியின் மூலமோ தட்டியெழுப்புவது என்பது இயலாத செயல். இயலாத செயல், இயலாத செயல், இயலவே இயலாத செயல்** என்பதுதான் உண்மை! உண்மை! உண்மை!

இப் பேருண்மையினை முறையாக பல கோணங்களில் ஆராய்ந்து நன்கு தெளிவாக உணர்ந்தவரே நமது குருதேவர். அதனால்தான், அவர் மொழியுணர்ச்சியையும், இன உணர்ச்சியையும் முழுமையாக விட்டுவிட்டு மத உணர்ச்சியை மட்டுமே தட்டியெழுப்ப முயலுகிறார். ஏனென்றால், மத உணர்ச்சி மூலம்தான் இன உணர்ச்சியையும், மொழி உணர்ச்சியையும் இனிமேல் தட்டியெழுப்பி கட்டிக் காக்க முடியும்.

அத்துடன், நமது குருதேவர்தான் அருளுலகத்தின் வழிகாட்டியாக, வழித்துணையாக, வழிப்பயனாக, நிலைத்த வழியாக என்றென்றும் தமிழர்களுக்கு இருக்கப் போகிறார் என்பதால், இனிமேல் அரசியல்வாதிகளோ, பகுத்தறிவுவாதிகளோ, நாத்திகவாதிகளோ, சமுதாய சீர்திருத்தவாதிகளோ நம் தமிழர்களின் தமிழ் உணர்ச்சியையும், இன உணர்ச்சியையும் வீணாக்க முடியாது!; விலைக்கு விற்க முடியாது!;

தவருகப் பயன்படுத்திட முடியாது, முடியாது, முடியாது, முடியவே முடியாது. இப்படி நன்கு திட்டமிட்டுத்தான் நமது குருதேவர் இந்துமதம் என்பது நமது தமிழ்மொழி மதம்தான்; இந்து என்ற சொல் தமிழ்ச் சொல்தான்; இந்துமதத்தின் குருபீடமாக, குருதேவராக, ஆச்சாறியாராக, தலைவராக, மடாதிபதியாக, பீடாதிபதியாக ஒரு தமிழன் தான் இருக்க முடியும்;... என்பனவற்றை விளக்கிக் கூறி வருகின்ருர்.

இந்துமதத்தின் மெய்யான செயலாக்கங்களில் தமிழ்மொழி இந்துமதத்தில் இருந்து அகற்றப்பட்டதால்தான்; இந்துமதக் கோயில்கள் அருள்நலம் குன்றின. இந்துமதக் கடவுள்களுக்கும், மக்களுக்கும் உள்ள தொடர்பு குறைந்தன. இந்துமத வரலாறுகள் வெறும் கற்பனைக் கதைகளாகக் கருதப்படலாயின. இந்துமதத்தின் தத்துவங்களும், சித்தாந்தங்களும் புரியாதவைகளாயின! சாத்திற சம்பிறதாயங்கள் பயனற்றவைகளாயின! இந்துமதத்தின் அருளாளர்கள் கேலிக்கும் கிண்டலுக்கும் உரியவராளுர்கள்! இந்துமதத்தின் கோயில்களும், சொத்துக்களும் மக்களின் வேட்டைப் பொருளாயின. இந்துமதத் தலைவர்கள் முழுக்க செல்வாக்கு இழந்தார்கள். இந்துமதத்தின் மடாலயங்கள் தேவையற்றதாகக் கருதப்படலாயின. இந்துமதமே பொருளற்றதாகவும், மூடநம்பிக்கை மிகுந்ததாகவும், பயனற்றதாகவும், முறையற்றதாகவும், வேதமற்றதாகவும், வரலாறு அற்றதாகவும் கருதப்படலாயிற்று.... இவற்றிற்கெல்லாம் மேலாகத் தமிழர்கள் தங்களுக்கென்று எந்தவிதமான மதமுமே இல்லாத நாடோடிகள் அல்லது காட்டுவாசிகள் என்று கருதப்படக் கூடிய இழிநிலையும், பழிநிலையும் உருவாயிற்று...

இந்தக் காலக்கட்டத்தில்தான் **நமது குருதேவர் தமிழர்களின் மானங் காக்க, உரிமை காக்க, பெருமை காக்க, வரலாற்று புகழை நிலைநிறுத்த, இந்துமதத்தின் அருமைபெருமைகளை அநுபவப் பூர்வமாக**

**விளக்கிட ‘தமிழ்மொழிதான் அண்டபேரண்டங்களுக்கே அருளுலக ஆட்சிமொழி’ ...** எனப்படுகின்ற பேருண்மைகளையெல்லாம் உலக அளவில் எடுத்துக் கூறிடவும், நிலைநாட்டிடவும் முயன்று வருகிறார். ஆனால், இவருக்குத்தான் கணக்கற்ற தோல்விகள் தொடர்கின்றன. எனவேதான் சுற்றுப்பயணங்களையெல்லாம் குறைத்துக் கொண்டு ஒருசில வட்டாரங்களுக்கு மட்டும் சுற்றுப்பயணம் செய்தே அருளுலக செயல்வீரர்களை உருவாக்கும் பணியில் ஈடுபட்டிருக்கின்றார். விரகாலூர் வட்டார செல்வி K.சமுத்திரவள்ளி, திரு Dr S.அமிர்தராசு, திரு ரோமராசு, திரு செபசுத்தியார், திரு சான்பாசுகோ, ... முதலியவர்கள் எல்லாம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளீர்கள்.

9) தமிழ்மொழியிலிருந்து தனித்து தமிழ் இலக்கியத்தையோ, தமிழர் சமுதாயத்தையோ, தமிழர் கலையையோ, தமிழர் மதத்தையோ, தமிழர் அரசியலையோ பிரிக்கவே முடியாது. எல்லாவற்றிலுமே தமிழ் இருந்தே தீரும். எதிலும் தமிழின் அருளூற்றும், அருளாற்றலும் இருந்தே தீரும். அதாவது தமிழகத்தின் சிறுமி, சிறுவன், இளைஞன், கன்னிப்பெண், புதுமணமான கணவன், மனைவியர், கர்ப்பிணி, தாய்மை அடைந்தவர் (தாய்), தந்தை, முதியவர், ... என்ற உறவு நிலை அல்லது பருவநிலை அனைத்துமே தெய்வீகமாகத்தான் கருதப்படுகிறது. அதுதான் தமிழர் மொழியின் சிறப்பு, தமிழர் மதத்தின் சிறப்பு, தமிழர்களின் சிறப்பு.

அரசர்கள் முதல் அமைச்சர், அறங்கூறுவோர், தளபதி, படைவீரர், அரசாங்க அதிகாரிகள், ஊர்த்தலைவர்கள், ஊர்க்காவலர்கள், கிராம கணக்குப்பிள்ளை, ஊழியர்கள், நாட்டாண்மை, புலவர்கள், இசைவாணர்கள் (பாணர்கள்), விறலியர்கள் (ஆடுபவர்கள்), ஓவியர்கள், சிற்பிகள், ஆசிரியர்கள், ... முதலிய சமுதாய அரசியல் கலைத்துறை தலைவர்கள் அனைவருமே பத்தியாளர்களாக, ஓரளவு சத்தியாளர்களாகத்தான் இருந்து வருகிறார்கள். இதில் அருளுலக

நம்பிக்கை இல்லாதவர்களோ, அருளாற்றல் இல்லாத நாத்திகர்களோ ஏறத்தாழ யாருமே இல்லையென்றே கூறலாம். எப்பொழுதோ சிலர் தோன்றியிருக்கிறார்கள் என்றால், அவர்கள் மின்மினிப் பூச்சிகளாகத்தான் வாழ்ந்து சென்றிருக்க முடியும்.

இவற்றால், <u>**அருளூறு தமிழ்மொழியினால் இயங்கும் தமிழர்கள் வாழ்க்கை எல்லா நிலைகளிலும் முழுக்க முழுக்க மதத்தையே அடிப்படையாகவும், உள்ளீடாகவும் கொண்டதாகத்தான் இருக்க முடியும். எனவேதான், தமிழர்களின் வாழ்விலிருந்து மொழி அடிப்படையிலோ அல்லது இலக்கிய அடிப்படையிலோ அல்லது சமுதாய அடிப்படையிலோ அல்லது அரசியல் அடிப்படையிலோ மதத்தை மறக்கவும் முடியாது, துறக்கவும் முடியாது, புறக்கணித்து ஒதுக்கவும் முடியாது. முடியவே முடியாது என்று இப்படி மிகத் தெளிவான கருத்தை வழங்குகிறார் நமது குருதேவர்.**</u>

10) மதம் தமிழர்களின் வாழ்வில் அனைத்து நிலைகளிலும் இரண்டறக் கலந்து இருக்கிறது. தமிழர்கள்தான் இந்தியாவின் பூர்வீகக் குடிகள். எனவேதான், தமிழர்களுடைய மதமான இந்துமதம்தான் இந்தியாவில் உள்ள அனைத்து மதங்களிலும் அடிப்படையாகவும், உள்ளீடாகவும், முடிவாகவும் இருக்கிறது. இவற்றையெல்லாம் எண்ணித்தான் <u>**மத வழிப் புரட்சி மூலமே இத் திருநாட்டில் ஒரு முழுமையான பண்பாட்டுப் புரட்சியை உருவாக்க முடியும் (A Total Revolution can be founded or formed only through the Religious Revolution in this Motherland...**</u>) என்ற கருத்தை ஆரம்பம் முதல் இன்றுவரை எல்லாவகை சித்தர்களும், எல்லா பீடாதிபதிகளும் வற்புறுத்தி வருகிறார்கள். பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதியான நமது குருதேவரும் இதே கருத்தைத்தான் செயல்படுத்துகிறார்.

எனவே, விரகாலூர் வட்டாரத்தார் மட்டுமின்றி தமிழகத்தில் உள்ள ஒவ்வொரு வட்டாரத்தார்களும் நமது மக்களுக்கு மத வரலாறுகளேயும், தத்துவங்களேயும், சித்தாந்தங்களேயும், பூசைகளேயும், சாத்திற சம்பிறதாயங்களேயும், அருளாளர்களின் சாதனைகளேயும், போதனைகளேயும், ... மிகத் தெளிவாக ஏட்டளவிலும், பேச்சளவிலும், செயலளவிலும் விளக்கி உரைத்தேயாக வேண்டும்! விளக்கி உரைத்தேயாக வேண்டும்! விளக்கி உரைத்தேயாக வேண்டும்! அப்பொழுதுதான் மதத்தின் பேரால் வாழும் கோயில்களோ, மடங்களோ, சாமியார்களோ, கலேஞர்களோ, தலேவர்களோ, மற்ற பிறரோ தொடர்ந்து தமிழர்களின் ஒற்றுமைக்கு கேடு விளேவிப்பவர்களாக இருக்க மாட்டார்கள்.

அதாவது தமிழர்களே எல்லாம் ஒன்றுதிரட்டி ஒற்றுமைப்படுத்த வேண்டுமென்ருல் மதத்தின் மூலம்தான் முடியும். அதற்கு மதத்தை அநுபவப் பூர்வமாக மருந்தாகவும், விருந்தாகவும் பயன்படுத்திக் கொள்ளும் வகைகளே சித்தர் நெறி மூலம்தான் பரப்ப முடியும். அப்பொழுதுதான் மக்கள் மதத்தின் பயன் உணர்ந்து, மதம் வழியாக ஒன்றுபடுவார்கள். எனவே, தமிழர்களுடைய மதமான இந்துமதத்தைத் தவிர வேறு எதனுலும் தமிழர்களே ஒன்றுதிரட்ட முடியாது! ஒற்றுமைப்படுத்த முடியாது! தமிழ்மொழி விடுதலே பெற முடியாது! தமிழினம் விடுதலே பெற முடியாது! தமிழர் தன்மானம் பிழைக்காது! தழைக்காது! தமிழர்களுடைய தன்னம்பிக்கை வளரவே வளராது! தமிழர்களின் பண்பாடும், நாகரிகமும் வளர்ச்சி அடையவே அடையாது! தமிழர்களின் கூலி மனப்பான்மையையும், அடிமை சிந்தையையும் மாற்றவே முடியாது! ...

இவற்றை எல்லாம் படித்தவர்கள் கேட்கவோ, சிந்திக்கவோ பெரும்பாலானவர்கள் இல்லே நம் நாட்டில். எனவே, பெயரளவில் பள்ளிக் கூடம் சென்றவர்களிடமும், படிப்பறிவு இல்லாத மக்களிடமும்தான் இவற்றை விளக்கிக் கூற வேண்டும். அதாவது,

உண்மையைச் சொல்ல வேண்டுமேயானுல், நம் நாட்டில் நூற்றுக்குத் தொண்ணூற்றைந்து பேர் படிப்பறிவு இல்லாதவர்கள்தான். இன்னும் சொல்லப் போனுல், படித்தவர்கள் அடிப்படை எண்ணிக்கையில் கணக்கிடப்படும் இந்த ஐந்து பேர்கள் கூட எதையும் சிந்திக்கத் தயாராக இல்லாத கூலி மனமும், அடிமைச் சிந்தையும் உடையவர்கள்தான். இப்படிப்பட்ட நமது தாய்த் திருநாட்டை அருட்கொடை வள்ளலாகவும், தத்துவ நாயகமாகவும், அருளாட்சி நாயகமாகவும், கருவறை மூலவர்களின் அம்மையப்பராகவும், ஞானுச்சாரியாராகவும், அரசயோகியாகவும், குவலய குருபீடமாகவும் விளங்குகின்ற நமது தலைவர் குருதேவர் குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரூர் அவர்களால்தான் மாற்ற முடியும். **இதை நாம் புரிந்து கொள்ள வேண்டும், பிறருக்குப் புரிய வைத்திட வேண்டும்.**

11) நம்மில் விரல்விட்டு எண்ணத் தக்கவர்கள்தான் அருட்சத்திகளையும், சித்திகளையும் பெற்றிருக்கிறோம். ஆனுல், இவர்களுக்கிடையில் கூட மெய்யான குருபத்தியோ, முழுமையான தொண்டு உள்ளமோ இல்லை! இல்லை! இல்லை! இல்லவே இல்லை! அதாவது, நம்மிடையே அ.வி.தி. செயல்வீரராகச் செயல்படுபவர்கள், 'குருதேவர் தங்களுக்குள் இருந்துதான் தங்களைச் செயல்படுத்துகிறுர்' என்ற பேருண்மையைச் சீக்கிரத்திலேயே மறந்து விடுகிறுர்கள், துறந்து விடுகிறுர்கள். இதனுல்தான் இயக்க வளர்ச்சி தங்கி மங்கி தேங்கி நிற்கிறது.

மேலும், நமக்குள் பலர் பதவியாசையாலும், புகழாசையாலும், பொருளாசையாலும், போட்டி பொருமையாலும், தானென்ற அகம்பாவத்தாலும், ஆணவத்தாலும், ... மற்றவர்களோடு சேர்ந்து அல்லது சேர்த்து ஒன்றுகூடி இப்படிச் செயல்படாமல் தனித்து நிற்கிறுர்கள். இதனுல்தான் ஏறத்தாழ தமிழகம் முழுவதுமே நமது

இயக்கத்தைத் தெரிந்தவர்கள் இருந்தும் கூட நமது இயக்கம் கட்டுக்கோப்பாக வளர முடியவில்லே.

அதாவது கடவுளேக் கும்பிடுபவர்கள் அத்தனே பேரும் நமது இயக்கத்தைச் சேர்ந்தவர்கள்தான்; கோயிலுக்குப் போகின்ற அத்தனே பேரும் நம்முடையவர்கள்தான்; மொழிப்பற்றுடைய அத்தனே பேரும் நம்முடையவர்கள்தான்; இனப்பற்று உள்ள அத்தனே பேரும் நம்முடையவர்கள்தான் ... ஆனுல், இவர்களே யெல்லாம் இயக்கத்தில் உறுப்பினராக்கி, ஆங்காங்கே கிளே நிறுவனங்களே உண்டாக்கி, அவற்றின் அடிப்படையில் வட்ட, மாவட்ட, மாநில அமைப்புக்களேயும் உண்டாக்கி நாடு தழுவிய கட்டுக்கோப்பான வளர்ச்சியை நமக்கு உண்டாக்க வேண்டும். இதற்காக ஆர்வமுள்ள தமிழர்கள் சிலராவது பெரிய தியாகங்கள் செய்து செயல்பட முன்வர வேண்டும். இப்படி கருத்து விளக்கமும், செயல்திட்டமும் கூறி தமிழர்களேப் பொதுவாழ்வில் ஈடுபடுத்தக் கூடிய ஒரே ஒரு தலேவர் நமது குருதேவர்தான்.

இன்னும் சொல்லப் போனுல் இந்த உலகிலேயே மிகத் தெளிவான கொள்கைகளேயும், செயல் திட்டங்களேயும், குறிக்கோள்களேயும் உடைய ஒரே ஒரு இயக்கம் நமது இந்து மறுமலர்ச்சி இயக்கம்தான். எனவே, இந்த அஞ்சலே முடிந்தவரை பலருக்கும் படித்துக் காட்டுங்கள்; இதில் உள்ள கருத்துக்களேப் பற்றி விவாதியுங்கள்; இதிலுள்ள கருத்துக்களே செயலாக்க முன்வாருங்கள்; பலரையும் முன்வரச் செய்யுங்கள். அப்பொழுதுதான், அனேத்துக்கும் மூலமாக, முதலாக, வழியாக, வழிகாட்டியாக, வழித்துணேயாக, வழிப்பயனுக, தத்துவமாக, செயல் சித்தாந்தமாக இருக்கக் கூடிய நமது குருதேவரைப் பயன்படுத்திக் கொள்ள முடியும் நாம்.

12) "... இம் மண்ணுலகில் எத்தனேயோ மதங்கள் தோன்றி மறைந்து இருக்கின்றன; தோன்றி வாழ்ந்து கொண்டு இருக்கின்றன; இனித் தோன்றப் போகின்றனவாக இருக்கின்றன. இந்த மதங்கள்

எல்லாம் அவைகளைத் தோற்றுவித்தவர்களின் பெயர்களாலேயே விளங்குகின்றன! விளங்கப் போகின்றன! குறிப்பாக எல்லா மதங்களிலுமே அந்தந்த மதங்களைத் தோற்றுவித்தவர்களின் வரலாறுகளும், சாதனைகளும், போதனைகளும் அப்படியே மதமாக மாறியிருக்கின்றன. ஆனால், அண்டபேரண்டம் முழுதும் வாழுகின்ற பதினெண்சித்தர்களுடைய இந்துமதம் தனக்கென தத்துவங்களையும், செயல் சித்தாந்தங்களையும், அருளூறச் செய்யும் வாசகங்களையும், தொடர்ந்து வளர்ந்து கொண்டே இருக்கின்ற அருளுலக வரலாறுகளையும், காரணகாரியங்களையும், அறிவுப்பூர்வமாக எளிதில் புரியக் கூடிய சாத்திறச் சம்பிறதாயங்கள், ... முதலியவைகளையே பெற்றிருக்கின்றது. இங்கு எந்த தனிமனிதர் ஒருவரின் பெயரும் முதன்மை பெறவில்லை, தலைமை பெறவில்லை. இதுதான் இந்துமதத்தின் சிறப்பு. அதாவது, என்றைக்கும் அழியாத அளவிற்கு செழிப்போடு விளங்கக் கூடிய கொள்கைகளும், குறிக்கோள்களும், நடைமுறைகளும் இந்துமதத்தில் இருக்கின்றன. இதுதான் ஒருகாலத்தில் உலகம் முழுவதும் பரவி இருந்தது. இதுதான் உலக மதங்களுக்கு எல்லாம் தாயாக விளங்குகிறது, ...” என்ற குருபாரம்பரிய வாசகத்தைத்தான் நமது குருதேவர் நம்பிக்கைக்குரிய அனைவருக்கும் கூறிவருகிறார். இனிமேல் நாமும் இதை அனைவருக்கும் கூறுவோம்.

விரிவஞ்சி இத்துடன் நிறுத்திக் கொள்கிறோம்.

இங்ஙனம்,

**அன்பு**

**தலைமைப்பீடப் பணியாளர்கள்,**

**சென்னை-11.**

**//உண்மை நகல்//**

**//இதன் மூலநகல்: சித்தரடியார் திரு சீ.மணி அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

# <u>இந்துமதம் வேறு; ஹிந்துமதம் வேறு!</u>

ஓம்

தலைமைப்பீடம்,
29-5-89.

உயர்திரு து.ஏ.இரமணன் B.Com., (17, கீழ வடக்குத் தெரு, துறையூர்-621010, திருச்சி Dt.) அவர்கள் சமூகத்திற்கு,

குருதேவர் பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி, ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் அவர்கள் ஆணைப்படி தலைமைப்பீடம் விடுக்கும் **<u>கருத்து விளக்க மடல்</u>**:

1) அனைத்தும் குருவின் செயலே! தாத்தாக்கள் ஆத்தாக்கள் அம்மையப்பன்கள் திருவருளே!

2) நண்பரே! வணக்கம். நலம். நலமறிய ஆவல். தங்களின் 26-5-89ஆம் தேதியிட்ட அஞ்சல் கிடைத்தது. குருதேவரிடம் படித்துக் காண்பிக்கப்பட்டது. அவர் விவரம் அறிந்தார். மகிழ்ச்சி அடைந்தார். தங்களையும் தங்கள் குடும்பத்தினரையும் வாழ்த்துகிறார்.

3) நண்பரே! ரூ.200 மதிப்புள்ள புத்தகங்கள் இயக்கம் பற்றி அறிய இருக்கின்றது. நீங்கள் உங்கள் பொருளாதார வசதி போல் அனுப்பினால் அதற்கேற்ப முக்கிய புத்தகம் அனுப்புவோம்.

4) நண்பரே! நீங்கள் விரும்பினால், உங்களுக்குரிய சாப்பாடு, போக்குவரத்துச் செலவை தாங்களே ஏற்றுக் கொண்டால் பதினெண்சித்தர் பீடக் கருகுலத்திற்கு நேரில் வரலாம். குருதேவரையும் சந்திக்கலாம். குருதேவர் அவர்கள் ஒரு கல்லூரிப் பேராசிரியர்

என்பதால், யாரை வேண்டுமானாலும் சந்திக்கத் தயாராக இருக்கிறார். அதுவும் தங்களைப் போன்ற படித்த இளைஞரை சந்திக்க மிகவும் விரும்புவார்.

5) நண்பரே! இத்துடன் உங்களுக்கு சில அறிவிக்கைகள் அனுப்பியிருக்கின்றோம். உங்களுடைய ஆர்வத்தைப் பொறுத்தவரையில் தொடர்ந்து அனுப்புவோம். மேற்கொண்டு விவரங்கள் வேண்டுமானால்; திருச்சி மாவட்டத்தில் உள்ள (1) அருள்மிகு சமயபுரம் மாரியம்மன் சன்னிதானம் சித்தரடியாள் K.சமுத்திரவள்ளி (வடக்குத் தெரு, விரகாலூர் P.O., இலால்குடி Tk, திருச்சி - 621722), (2) அருள்மிகு உத்தண்டமாகாளி சன்னிதானம் சித்தரடியான் திரு S.அமிர்தராசு RIMP (அகத்தியர் மருத்துவ நிலையம், இரயில்வே நிலைய சாலை, புள்ளம்பாடி P.O., இலால்குடி Tk, திருச்சி - 621711) மற்றும் அருகில் உள்ள திருவையாறு நண்பர்கள் (1) திரு N.சங்கரன் (அம்மாள் கிராமம், திருவையாறு - 613204), (2) திரு A.P.திருஞானசம்பந்தம் (27N, அகிலாண்டபுரம், திருவையாறு - 613204), (3) திரு பழனியாண்டி, திருவையாறு, (4) தென்மண்டல நிர்வாகக் குழு தலைவர், தென்மண்டல அ.வி.தி. தலைவர் திரு ச.துரைராசன் (115, புட்டுத் தோப்பு ரோடு, மதுரை - 625010), ... நேரில் சென்று பெறலாம், தொடர்பு கொள்ளலாம். இவ்வஞ்சலை நேரில் எடுத்துச் சென்று மேற்குறிப்பிட்டவர்களிடம் காண்பித்தால், உங்களுக்கு நல்ல அறிமுகம் கிடைக்கும். உங்களுக்கு வேண்டிய உதவிகளையும் செய்வார்கள்.

6) நண்பரே! அருளுலகம் என்றால் மக்கள் மந்திரம், மாயை, பேய், பிசாசு, சோதிடம், ... முதலியவைகள்தான் என்று எண்ணுகிறார்கள். இவையெல்லாம் சாதாரண அடிப்படைதான். அதுவே மதம் அல்ல. மதம் என்பது தத்துவங்களும், சித்தாந்தங்களும், அருளாளர்களின் வரலாறுகளும், அவர்களின் போதனைகளும் மிகுந்த ஒன்றேயாகும். எனவேதான், அவற்றை குருவழியாகத்தான் உணர முடியும். நம்

நாட்டைப் பொறுத்தவரை இதுவரை மதத்தைப் பற்றி முறையாகத் தெரிந்த தலைவர்களோ, மதத்தைப் பற்றி நிறைவாகத் தெரிந்த தலைவர்களோ மதத் துறையிலோ, சமுதாயத் துறையிலோ, அரசியல் துறையிலோ பொதுச் சேவைக்குப் புறப்பட்டு வரவில்லை. அதாவது, அப்படிப்பட்டவர்கள் எல்லாம் இலைமறை காயாகவே இருந்திட்டார்கள்.

எனவேதான், நம் நாட்டின் அரசியல்வாதிகளும், சமுதாயவாதிகளும், இலக்கியவாதிகளும், மதவாதிகளும், ... தங்கள் விருப்பம் போல் மதச் சீர்திருத்தம் என்ற பெயரால் மதத்தை புயல்காற்றில் கிழித்தெறியப் பட்ட வாழைமரத்து இலைகள் போல் ஆக்கி விட்டார்கள். இனிமேல்தான் தங்களைப் போன்ற இளைஞர்கள் புறப்பட்டு வாழையில் கிழங்குகளையும், பக்கக் கன்றுகளையும் தோண்டியெடுத்து புதிய வாழைத் தோப்பை உண்டாக்க வேண்டும். எனவே, தாங்கள் ஏதோ குருதேவருக்குக் கடிதம் எழுதினேம், பதில் கிடைத்தது என்று பாராமல் நமது மத மறுமலர்ச்சிக்கும், வளவளர்ச்சிக்கும் பாடுபடுங்கள்.

இந்து மறுமலர்ச்சி இயக்கம் மூலம்தான் தமிழர்களை ஒன்றுபடுத்த முடியும். கி.மு. 72இல் தோற்றுவிக்கப்பட்டதுதான் இந்த இந்து மறுமலர்ச்சி இயக்கம். இதன் கீழ் செயல்படும் நாற்பத்தெட்டு (48) வகைப்பட்ட நிறுவனங்கள். இந்த நிறுவனங்களை திருச்சியைச் சேர்ந்த அமராவதியாற்றங்கரைக் கரூரில் வாழ்ந்த பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதி குருமகாசன்னிதானம் ஞாலகுரு சித்தர் அமராவதியாற்றங்கரைக் கருவூரார் அவர்கள் கி.மு.72இல் துவக்கிச் சென்றுள்ளார். அவற்றில் இரண்டு; (1) அருட்பணி விரிவாக்கத் திட்டம் என்பதும், (2) தமிழின மொழி மத விடுதலை இயக்கம் என்பதும் ஆகும். இந்த இரண்டு அமைப்புக்களும்தான் தமிழகத்தில் மிக வேகமாகச் செயல்பட்டு வருகின்றன.

தமிழர்களுக்கு அருளுலகில் உள்ள இருள்களை எல்லாம் அருட்பணி விரிவாக்கத் திட்டம் துடைக்கின்றது. அதாவது அருட்பணி

விரிவாக்கத் திட்டம் அருளை அநுபவப் பொருளாக வழங்குகிறது. யார் எத்தகைய சித்திகளைக் கேட்டாலும் அது தருகிறது.

இதேபோல், தமிழின மொழி மத விடுதலை இயக்கம்தான் தமிழர்களுக்குப் பொருளுலகில் உள்ள இருள்களை எல்லாம் போக்குகிறது. அதாவது தமிழ் இனத்துக்கும், மொழிக்கும், மதத்துக்கும் முறையான நிறைவான வரலாறுகளையும், இலக்கியங்களையும், தத்துவங்களையும், சித்தாந்தங்களையும் அறிவிக்கிறது.

மேலும் மெய்யான வரலாறுகளை பதினெண்சித்தர்களுடைய குரு பாரம்பரியம் (The Religious History), அரச பாரம்பரியம் (The Political History), இலக்கிய பாரம்பரியம் (The History of Language and Literature) என்ற முப்பெரும் தொடர் வரலாற்று நூல்கள் அடிப்படையில் வெளியிடப்படுகின்றன. எனவே, தமிழர்களின் வரலாறுகளின் இருட்டடிப்புக்களும், புரட்டுக்களும், மோசடிகளும் அகற்றப்பட்டு; தமிழர்கள் தங்கள் மெய்யான வரலாற்றைப் பெறும் வாய்ப்புக் கிடைத்திருக்கின்றது இன்றைய பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி மூலம்.

ஆனால், அவரின் 53 ஆண்டுக்கால வாழ்க்கையின் முயற்சிகளும் ஏறத்தாழ பாலைவனத்தில் பெய்த மழையாகவும், காட்டில் காய்ந்த நிலவாகவும் ஆகிவிட்டன. இதை மாற்ற உங்களைப் போன்ற இளைஞர்கள் முன்வர வேண்டும். இது போன்று பல்லாயிரக்கணக்கான அஞ்சல் கட்டுரைகளும், சில ஆயிரம் நூல்களும் எழுதப்பட்டு இருக்கின்றன. இதுவரை 449 அறிவிக்கைகள் அச்சிடப்பட்டு வெளியிடப் பட்டுள்ளன. 64 புத்தகங்களுக்கு மேலேயும் அச்சிடப்பட்டுள்ளன.

குருதேவரோ கல்லூரி இளைஞர்கள் மத்தியில் அன்றாடம் மூன்று மணி நேரம் சொற்பொழிவாற்றுகின்றார். மாதம் ஒருமுறையோ அல்லது இருமுறையோ தமிழகத்தில் சுற்றுப்பயணம் செய்து சொற்பொழிவாற்றுகிறார், அருட்பணியாற்றுகிறார். நாடெங்கும்

நூற்றுக்கணக்கான வழிபாட்டு நிலையங்களிலும், சுடுகாடுகளிலும் அருட்கோட்டங்கள் அமைத்து மக்களுக்கு அருள் வழங்கப்படுகிறது. ஆயிரமாயிரம் சித்தரடியான்கள், சித்தரடியாள்கள், சித்தரடியார்கள் அன்றாட வாழ்வில் மக்களோடு மக்களாகக் கலந்து மதத்தையும், மதத்தின் தேவையையும், ஆற்றலையும், பயனையும் விரிவாகத் தெரிவிக்கிறார்கள்; அருளை அநுபவப் பூர்வமாக வழங்குவதன் மூலம் உணர்த்துகிறார்கள்.

இருந்தும் திரைப்பட மாயைகளாலும், சாதிமத வெறிகளாலும் தமிழர்கள் தாங்கள் தமிழர்கள் என்று உணர மறக்கிறார்கள், மறுக்கிறார்கள், வெறுக்கிறார்கள். மேலும், வாழையடி வாழையாகத் தன்மான உணர்வு, இனமான உணர்வு, தன்னம்பிக்கை உணர்வு, மொழிப் பற்று, இனப் பற்று, ... முதலியவை இருக்கக்கூடிய தமிழர்களே அன்னியர்களுக்கு அடிமைகளாகவும், கூலிகளாகவும், கங்காணிகளாகவும் வாழ்வதிலேயே பெரும் மகிழ்ச்சி அடைகிறார்கள். இன்னும் சொல்லப் போனால் பிறமொழிகளுக்கு அடிமையாகி இருக்கின்றார்கள்.

எனவேதான், இவர்களுக்கு எல்லாம் தமிழன் என்ற உணர்வையும், பற்றையும், நம்பிக்கையையும் ஊட்டுவதற்கு இந்துமதத்தை மறுமலர்ச்சி அடையச் செய்தேயாக வேண்டும். இந்துமத மறுமலர்ச்சியே தமிழ் மொழி மறுமலர்ச்சி, தமிழ் இன மறுமலர்ச்சி, தமிழ் இன ஒற்றுமை வளர்ச்சிக்கு அடிப்படை. இக் கருத்துக்களை இரவு பகலாக இந்து மறுமலர்ச்சி இயக்கத்தவர்கள் நாடெங்கும் எடுத்துக் கூறியும் எதிர்பார்த்த பயன் இன்னும் விளையவில்லை. எனவே, தங்களைப் போன்ற வீர இளைஞர்கள்தான் நமது மொழி இனம் காக்க ஒரே வழியான இந்துமத மறுமலர்ச்சிக்காக பாடுபட முன்வர வேண்டும். உங்களுடைய ஆர்வமுடைய பதிலை எதிர்பார்க்கின்றோம். தங்கள் வட்டாரத்தில் பல நண்பர்களை உருவாக்குங்கள். கிராமங்கள் தோறும் சுற்றுப்பயணம் செய்யுங்கள்.

7) நண்பரே! இந்துமதம், அதாவது பதினெண்சித்தர்கள் உண்டாக்கிய மெய்யான இந்துமதத்தின் அடிப்படையில் கடந்த இரண்டாயிரம் (2000) ஆண்டுகளுக்குள் மடமைகளாலும், மூட நம்பிக்கைகளாலும், கண்மூடிப் பழக்கவழக்கங்களாலும், பயனற்ற சுரண்டல்மிகு சடங்குகளினுலும், ஆபாசப் புராணங்களாலும், எவ்வித அருளாற்றலும் இல்லாத சமசுகிருத மொழியாலும் ஹிந்துமதம் என்ற ஒன்றை பிறமண்ணினராகிய பிருமணர்கள் உண்டாக்கி விட்டார்கள்.

(The Indhuism is not Hinduism). அதாவது, "**இந்துமதம் வேறு; ஹிந்துமதம் வேறு**" என்ற கருத்தை முதலில் தமிழர்களுக்கும், பிறகு இமயம் முதல் குமரி வரை உள்ள இந்தியர்களுக்கும் மிகத் தெளிவாக விளக்கிட வேண்டும். அப்பொழுதுதான் இந்துமதம் மிகப்பெரிய மறுமலர்ச்சி அடைய முடியும்.

இந்துமதம்தான் இம் மண்ணுலகில் தோன்றிய முதல் மதம். இந்துமதம் ஒரு பகுத்தறிவு மிக்க பயனுள்ள சமூக விஞ்ஞானம் ஆகும். (The INDHUISM is a Rationalistic and Radical Social Science. It is the True World History) இதுவே ஒரு உண்மையான உலக வரலாறு ... எனவே, ஒவ்வொரு தமிழனும் தான் ஒரு இந்து என்று கூறிக் கொள்ள பெருமைப்பட வேண்டும். இந்து என்பது ஒரு தமிழ்ச் சொல்லே. மறக்க வேண்டாம்! மறக்க வேண்டாம்! மறக்க வேண்டாம்!

8) காலமின்மையால் இக்கடிதத்தை நீட்டிக்க முடியவில்லை. ஒரு பானை சோற்றுக்கு ஒரு பிடி சோறு பதம் என்பது போல இக் கடிதம் போதும். மேலும் நீங்கள் படித்தவர். தங்களை மதித்து குருதேவர் ஓய்வின்மைக்கு இடையில் இந்தக் கருத்து விளக்க அஞ்சலைத் தலைமைப்பீட எழுத்தர் மூலம் எழுதியுள்ளார். உடனடியாக இக்கடிதத்திற்கு பதில் எழுதவும். தொடர்ந்து அஞ்சல் தொடர்பு வைத்துக் கொள்ளவும்.

**இந்து மறுமலர்ச்சி இயக்கம் வெற்றி பெறட்டும்!**

**தமிழின மொழி மத விடுதலை இயக்கம் அருளாட்சி அமைக்கட்டும்!**

அருளாட்சி அமைப்புப் பணியில் உங்கள் பணி என்ன? நீங்களே முடிவு செய்து கொள்ளுங்கள்.

அன்பே சிவம்!

ஓம் திருச்சிற்றம்பலம் ஓம்!

**அன்பு**
**தலைமைப்பீடம்,**
**29-5-89.**

**//உண்மை நகல்//**
**//இதன் மூலநகல்: சித்தரடியார் திரு சீ.மணி அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

# நமது இந்துமதத்தின் சிறப்பு

நமது இந்துமதத்தின் சிறப்பே எத்தகைய பாதிப்பு வந்தாலும் அதற்குப் பரிகாரமாக முடிகயிறு, தாயத்து, சக்கரம், உருத்திராக்கம், .... முதலியவைகளே மருந்தாகத் தருவதுதான். இதைப் பார்த்துத்தான் மற்ற மதங்கள் கற்றுக் கொண்டன. ஆனால், இந்து மதத்தில்தான் இந்துவேதப்படி மேற்படி அருளூறு பூசனைப் பொருள்களை தயாரிப்பதற்குரிய வழிவகைகள், நெறிமுறைகள், விதிகள் இருக்கின்றன.

ஆனால், நமது இந்துக்கள்தான் அப்பாவித்தனமாக, ஏமாளித்தனமாக மாற்று மதத்தவர்களின் சதிகளாலும், இந்துமத துரோகிகளின் சூழ்ச்சிகளாலும், இந்துமத விரோதிகளின் மறைமுக எதிர்ப்பு வேலைகளாலும், இந்து மதத்திற்கே உரிய மந்தரித்தல், பூசை செய்தல், திருநீறு குங்குமம் அணிதல்; தாயத்து, முடிகயிறு, சக்கரம், உருத்திராக்கம், .... முதலியவைகளைப் பயன்படுத்துதல் எனும் அருளுலகப் பாதுகாப்புச் செயல்திட்டங்களை மறுத்தும் வெறுத்தும் புறக்கணித்து ஒதுக்கி விட்டார்கள்! புறக்கணித்து ஒதுக்கி விட்டார்கள்! புறக்கணித்து ஒதுக்கி விட்டார்கள்!

**//குருதேவர் அவர்கள் 8-5-1993இல் சித்தரடியான் சுந்தரராமனுக்கு எழுதிய அஞ்சலின் ஒரு பத்தி.//**








தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய 11வது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரர் அவர்களின் (கி.பி.785 - 1040) பாரம்பரியத்தில் 12வது பதினெண்சித்தர் பீடாதிபதியாகத் திருத்தோற்றம் எடுத்த ஞானச்சாரியார் **குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர்** அவர்களின் குருவாணைப்படி இந்துவேத இலக்கியங்கள் இதில் வெளியிடப்படுகின்றன. இவை ஞாலகுரு அவர்கள் அமைத்திட்ட கையெழுத்துப் பிறதி நூலகங்களில் தாள் நைந்து, எழுத்து மங்கி, அழிந்து கொண்டிருக்கும் நகல்களின் பிறதிகளாகவே வழங்கப்படுகின்றன.

"இந்துக்களே! கோயில்களில், பூசைகளில் சமசுக்கிருதத்தைப் பயன்படுத்துவது பெரிய பாவம், கொடிய தீட்டு, நெடிய சாபம்."

\- குருபாரம்பரிய வாசகம்.


Published under the Divine Grace of His Holiness the 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Gnaalaguru Siddhar Arasayogi Karuvooraar by the Anaathi Sankaraachaariyaar Peedam Trust, (Regd) East Tambaram, Chennai. Printed by Mr. Sivaraman, Kamarajapuram, East Tambaram. Cell:09972130609 at Sri Vignesh Printers, Madurai.


https://newsletters.gurudevar.org https://books.gurudevar.org
https://gurudevar.in https://gurudevar.org

https://induism.org Email: indhuism@gmail.com

**காணிக்கை: ரூ.10/-**